**பிப்ரவரி – 21**

# TNPSC துளிகள்

- ‘தமிழ் தாத்தா’ என்று பிரபலமாக அழைக்கப் படும் உ. வே. சுவாமிநாதரின் பிறந்த நாள் (பிப்ரவரி 19) ஆனது தமிழ்நாட்டில் தமிழ் இலக்கிய மறுமலர்ச்சி தினமாக வெகுவாகக் கொண்டாடப் பட்டது.
- பிலிப்பைன்ஸ் நாட்டில் அமைக்கப்பட்டுள்ள பிரபல தமிழ் கவிஞரும் ஒரு தத்துவ ஞானியுமான திருவள்ளுவரின் சிலையை இந்தியத் தூதர் திறந்து வைத்துள்ளார்.
- T20 உலகக் கோப்பை போட்டியில் வென்ற இந்தியாவின் 19 வயதிற்குட்பட்ட கிரிக்கெட் அணியின் உறுப்பினரான சென்னையைச் சேர்ந்த G. கமலினி, மகளிர் பிரீமியர் லீக் (WPL) போட்டியில் அறிமுகமான மிகவும் இளம் வீராங்கனை என்ற பெருமையினைப் பெற்றுள்ளார்.
- மாற்றுத் திறனாளிகளுக்கான 23வது தேசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டியில் 30 அணிகளில் சுமார் 1,476 மாற்றுத் திறனாளி தடகள வீரர்கள் 155 போட்டிகளில் போட்டி இடுவதன் மூலம் 2025 சென்னை பதிப்பு ஒரு புதிய சாதனையினை படைத்துள்ளது.
- இந்திய வானிலை ஆய்வுத் துறையின் (IMD) 150 ஆண்டுகால சாதனைப் பயணத்தைக் கொண்டாடும் மிகவும் ஒரு தனித்துவமான திறந்தவெளி ஓவிய அருங்காட்சியகமான இந்தியாவின் முதல் “திறந்தவெளி சுவரோவிய அருங்காட்சியகம்” ஆனது டெல்லியில் உள்ள “மௌசம் பவனில்” திறக்கப்பட்டுள்ளது.
- இந்திய மறுசுழற்சி மற்றும் சுற்றுச்சூழல் தொழில்துறை மீதான சங்கமானது (REIAI) புது டெல்லியில் “கழிவு மறுசுழற்சி மற்றும் பருவநிலை மாற்றம் 2025” குறித்த ஒரு தேசிய மாநாட்டினை ஏற்பாடு செய்தது.
- வேளாண் மற்றும் நன்கு பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆனது, ஜெர்மனியில் நடைபெற்ற BIOFACH 2025 நிகழ்வில் இந்தியா முழுவதும் உள்ள முன்னணி இயற்கை வேளாண் பொருட்கள் ஏற்றுமதி நிறுவனங்கள் உடனான இந்தியாவின் இயற்கை முறை மரபைக் காட்சிப்படுத்தியது.
- இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள அஜ்மீர் நகரின் திருநர் சமூகத்தைச் சேர்ந்த காடிபதி சலோனி நாயக்கின் முக்கிய ஒரு வழிகாட்டியான அனிதா பாயின் நினைவாக அஜ்மீர் நகரானது முதலாவது அகில இந்தியத் திருநர்கள் மாநாட்டை நடத்தியதில் 2,000 பேர் கலந்து கொண்டனர்.
- முன்னணிக் கடன் மேலாண்மை தளமான CheQ ஆனது, செயற்கை நுண்ணறிவினால் இயங்கும் CheQ Wisor எனப்படும் நாட்டின் முதல் கடன் அட்டை நிபுணரை அறிமுகப் படுத்தி யுள்ளது.
- மத்தியப் பட்டு வாரியம் ஆனது, பட்டுத் துறையில் வளர்ந்து வரும் தொழில்நுட்பங்கள் குறித்த SILKTECH-2025 எனப்படும் ஒரு சர்வதேச மாநாட்டினைப் புது டெல்லியில் நடத்தி வருகிறது.
- இந்தியக் கடற்படையானது, LSAM 11 எனப்படுகின்ற படைத் தடவாளத்துடன் கூடிய ஒரு எறிகணையைக் கொண்ட தனது எட்டாவது இழுவைப் படகினை மகாராஷ்டிராவில் அறிமுகப்படுத்தியுள்ளது.
- பிரதமர், சமூகத்தில் அரசாங்கத்தின் தலையீட்டைக் குறைப்பதற்காக "கட்டுப்பாட்டு குறைப்பு ஆணையம்" அமைக்கப்படும் என அறிவித்துள்ளார்.
- வேளாண்மை மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (APEDA) ஆனது, இந்தியாவில் மிக முதல் முறையாக, முறையே உயர் தர சங்கோலா மற்றும் பக்வா ரக மாதுளைகளின் வணிக ரீதியான சில சோதனைத்

தொகுப்புகளை கடல் வழியாக ஆஸ்திரேலியாவிற்கு அனுப்பியுள்ளது.

- டெல்லியில் உள்ள இந்துக் கல்லூரி சமீபத்தில் தனது 126வது ஸ்தாபனத் தினத்தைக் கொண்டாடியது.
- முதலாவது ஒலிம்பிக் மின்னணு விளையாட்டுப் போட்டிகள் ஆனது, 2027 ஆம் ஆண்டில் சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் நடைபெற உள்ளது.

# தமிழ்நாடு செய்திகள்

## மகளிர் ஓட்டுனர்களுக்கு இளஞ்சிவப்பு நிற சீருடை




- தமிழக அரசானது 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் வாகன வீதிகளில் திருத்தம் செய்ய முன்வந்துள்ளது.
- ஒரு வரைவு திருத்தத்தின்படி, 'இளஞ்சிவப்பு நிற மூன்று சக்கர வாகனம்' என்பது சமூக நலம் மற்றும் பெண்கள் அதிகாரமளித்தல் துறையின் இளஞ்சிவப்பு நிற மூன்று சக்கர வாகனங்கள் சேவைத் திட்டத்தின் கீழ் சேவையாற்றும் மகளிர் ஓட்டுனர்களுக்கு என்று சொந்தமான மற்றும் மகளிரால் இயக்கப்படும் ஒரு மூன்று சக்கர வாகனங்கள் ஆகும் என்ற நிலையில் இவர்கள் இனி இளஞ்சிவப்பு நிறச் சீருடையை அணிவர்.
- இளஞ்சிவப்பு நிற மூன்று சக்கர வாகனங்கள் ஆனது, அவசர காலங்களில் விரைவான எதிர் நடவடிக்கையினை உறுதி செய்வதற்காக என்று காவல்துறை உதவி எண்ணுடன் இணைக்கப்பட்ட GPS / VLTD வசதியுடன் இணைக்கப்படும்.
- கடந்த ஆண்டு ஜூன் மாதம், சென்னையில் இளஞ்சிவப்பு நிற மூன்று சக்கர வாகனச் சேவை அறிமுகப்படுத்தப்படும் என்றும், 200 மகளிர் ஆட்டோ ஓட்டுனர்களுக்கு தலா 1 லட்சம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என்றும் அமைச்சர் அறிவித்தார்.

# தேசியச் செய்திகள்


## 'பீமா டிரினிட்டி' முன்னெடுப்பு

- இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) ஆனது 9 வது பீமா மாந்தன் நிகழ்ச்சியினை நடத்தியது.
- இந்த நிகழ்வின் போது, IRDAI தனது மிகவும் இலட்சிய நோக்கமிக்க 'பீமா டிரினிட்டி' திட்டத்திற்கான செயல்திட்டத்தை வெளியிட்டது.

- பீமா டிரினிட்டி ஆனது, பீமா சுகம், பீமா விஸ்தார் மற்றும் பீமா வஹாக் ஆகியவற்றை உள்ளடக்கியது.
- பீமா சுகம் ஆனது காப்பீட்டு நிறுவனங்களில் உள்ள அனைத்து வகையான காப்பீட்டுத் திட்டங்களின் விற்பனை, சேவை மற்றும் உரிமைக் கோரல்களுக்கான திறந்த நிலைச் சந்தையாகும்.
- பீமா விஸ்தார் என்பது மரணம், தனிநபர் விபத்து, சொத்து மற்றும் அறுவை சிகிச்சை ஆகியவற்றுக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப் படுவதற்கான காப்பீடுகளை உள்ளடக்கிய முதல் கலப்புக் காப்பீடு திட்டம் ஆகும்.
- பீமா வஹாக் என்பது பெண்களை மையமாகக் கொண்ட உள்ளூர்மயமாக்கப்பட்ட காப்பீட்டுத் துறை விற்பனைப் பிரிவாகும்.




## அடுத்த 10 ஆண்டுகளுக்கான இந்தியாவின் விண்வெளி செயல் திட்டம்




- இஸ்ரோ நிறுவனமானது, அடுத்த 10 ஆண்டுகளுக்கான இந்தியாவின் விண்வெளிப் திட்டப் பயணங்களின் எதிர்காலச் செயல் திட்டத்தினை வெளியிட்டுள்ளது.
- இஸ்ரோவின் மிக முக்கியத் திட்டம் விண்வெளிக்கு குறைந்த செலவிலான அணுகலை மேம்படுத்துவதைத் தொடர்ந்து மேற்கொள்ளப்பட உள்ள ககன்யான் திட்டமாகும்.

- Mark III ஏவு வாகனத்தின் திறனை 25 சதவிகிதம் அதிகரிப்பதற்காக புதிய உந்துவிசை அமைப்பு கொண்டு அது நன்கு மேம்படுத்தப்படும் என்ற நிலையில் இது அதன் ஏவுதல் குறித்த செலவினங்களைக் குறைக்கிறது.
- இஸ்ரோ நிறுவனம் ஆனது, திரவ ஆக்ஸிஜன் குறித்தும் மற்றும் 200 டன் எடை கொண்ட உந்து விசை இயந்திரம் ஆகியவற்றின் உருவாக்கம் குறித்தும் பணியாற்றி வருகிறது.
- அடுத்த தலைமுறை நுட்பத்திலான ஏவுதல் அமைப்பு ஆனது, SLV III வாகனத்தினை விட 1,000 மடங்கு திறன் கொண்டதாக இருக்கும்.
- எதிர்காலத்தில் மேற்கொள்ளப்பட உள்ள அறிவியல் ரீதியான ஆய்வுப் பயணங்களில் வெள்ளிக் கோள் ஆய்வுத் திட்டம், செவ்வாய்க் கிரக உலாவித் திட்டம், சந்திரயான்- 4 மற்றும் சந்திரயான் - 5 ஆகியவை அடங்கும்.

# சர்வதேசச் செய்திகள்

## OPEC+ குழுவில் பிரேசில்




- பிரேசில் நாட்டின் அரசாங்கம் ஆனது முக்கிய எண்ணெய் ஏற்றுமதி நாடுகளின் ஒரு குழுவான OPEC+ குழுவில் இணைவதற்கு ஒப்புதல் அளித்துள்ளது.
- OPEC+ குழுவானது, 2023 ஆம் ஆண்டின் பிற்பகுதியில் இந்த அமைப்பில் இணையுமாறு அதிகாரப்பூர்வமாக பிரேசில் அரசிற்கு அழைப்பு விடுத்தது.
- பிரேசில் நாடு ஆனது ஒரு நாளைக்கு சுமார் 4.32 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் உற்பத்தி செய்வதுடன், தென் அமெரிக்காவின் மிகப்பெரிய எண்ணெயினை உற்பத்தி செய்யும் நாடாக உள்ளது.
- தினமும் சுமார் 22 மில்லியன் பீப்பாய் எண்ணெய் உற்பத்தி செய்வதுடன், அமெரிக்கா உலகின் மிகப்பெரியதொரு எண்ணெய் உற்பத்தியாளராக உள்ள நிலையில் சவுதி அரேபியா ஆனது சுமார் 11 மில்லியன் பீப்பாய்கள் எண்ணெய் உற்பத்தியுடன் இந்த OPEC குழுவில் மிகப் பெரிய எண்ணெய் உற்பத்தியாளராக உள்ளது.

## உலகப் பொருளாதார மன்றம் 2025

- 2025 ஆம் ஆண்டு உலகப் பொருளாதார மன்றத்தின் (WEF) வருடாந்திரக் கூட்டம் ஆனது சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நாரில் நிறைவடைந்தது.
- இந்த ஆண்டிற்கான இந்தக் கூட்டத்தின் கருத்துரு, "Collaboration for the Intelligent Age".
- செயற்கை நுண்ணறிவு மற்றும் பசுமைத் தொழில்நுட்பம் ஆனது வாய்ப்புகள் மற்றும்

சவால்கள் ஆகிய இரண்டையும் முன் வைக்கின்றன என்பதை 2025 ஆம் ஆண்டு WEF எடுத்துரைத்தது.

- மகாராஷ்டிரா மொத்த முதலீட்டில் சுமார் 80% பங்கினைப் பெற்றுள்ளதுடன், இந்தியா மொத்தமாக முதலீட்டு உறுதிப்பாடுகள் மூலம் 20 லட்சம் கோடி ரூபாய்க்கு மேல் முதலீட்டினைப் பெற்றுள்ளது.
- தெலுங்கானா 1.79 லட்சம் கோடி முதலீட்டைப் பெற்றுள்ளது.
- ஜெர்மனி நாட்டுப் பொறியாளரும் பொருளாதார நிபுணருமான கிளாஸ் ஸ்வாப், 1971 ஆம் ஆண்டில் ஐரோப்பிய மேலாண்மை மன்றத்தினை நிறுவினார் என்ற நிலையில் இது 1987 ஆம் ஆண்டில் WEF மன்றமாக மாற்றப்பட்டது.
- 2015 ஆம் ஆண்டில், WEF அமைப்பானது அதிகாரப்பூர்வமாக ஒரு சர்வதேச அமைப்பாக அங்கீகரிக்கப் பட்டதோடு இதன் தலைமையகமானது சுவிட்சர்லாந்தின் ஜெனீவாவில் அமைந்துள்ளது.
- WEF வருடாந்திரக் கூட்டம் ஆனது சுவிட்சர்லாந்தின் டாவோஸ் நகரில் நடைபெற்றது.




## சர்வதேசக் கடற்படை ஆய்வு 2025





- 2025 ஆம் ஆண்டிற்கான சர்வதேச கடற்படை ஆய்வானது (IFR) இந்தோனேசியாவின் பாலியில் தற்போது நடைபெற்று வருகிறது.
- IFR என்பது பல்வேறு நாடுகளின் கடற்படைப் படைகளைக் காட்சிப்படுத்துகின்ற ஒரு

மதிப்புமிக்க பன்னாட்டுக் கடற்படை நிகழ்வாகும் என்பதோடு இந்தோனேசியாவின் அதிபரால் இது மதிப்பாய்வு செய்யப்படுகிறது.

- இது கடல்சார் பாதுகாப்பு பற்றிய பல்வேறு விவாதங்களை முன் வைப்பதோடு, உலக நாடுகளின் கடற்படைகளிடையே நல்லிணக்கத்தினை ஊக்குவிக்கிறது.

# பொருளாதாரச் செய்திகள்

## இந்தியாவின் எண்ணிமப் பொருளாதார பங்களிப்பு




- இந்தியாவின் எண்ணிமப் பொருளாதாரம் ஆனது, அதன் பொருளாதார வளர்ச்சிக்கு குறிப்பிடத்தக்கப் பங்களிப்பினை வழங்கும் துறையாக உருவெடுத்துள்ளது.
- இது 2022-23 ஆம் ஆண்டில் தன மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 11.74% (INR 31.64 லட்சம் கோடி அல்லது 402 பில்லியன் டாலர்) பங்கினை கொண்டுள்ளது.
- இத்துறையில் 14.67 மில்லியன் தொழிலாளர்கள் (மொத்தப் பணியாளர் வளத்தில் 2.55%) பணியாற்றுவதுடன், எண்ணிமப் பொருளாதாரம் ஆனது மற்ற பொருளாதாரத்தினை விட சுமார் ஐந்து மடங்கு அதிக உற்பத்தித் திறன் கொண்டதாக உள்ளது.
- 2029-30 ஆம் ஆண்டிற்குள் எண்ணிமப் பொருளாதாரத்தின் பங்கு ஆனது, ஒட்டு மொத்த மதிப்புக் கூட்டலில் சுமார் 20% ஆக வளர்ந்து, வேளாண்மை மற்றும் உற்பத்தியை விட அதிகமாக இருக்கும் என்று கணிப்புகள் தெரிவிக்கின்றன.

## இந்தியாவின் திறன்பேசி ஏற்றுமதி 2025

- ஏப்ரல்-ஜனவரி மாதக் காலக் கட்டத்தின் போது இந்தியாவின் திறன் பேசி ஏற்றுமதி ஆனது, 1.55 டிரில்லியன் ரூபாயை எட்டியது.
- இந்த ஏற்றுமதிகள் ஆனது 2024 ஆம் ஆண்டு நிதியாண்டில் 1.31 டிரில்லியன் ரூபாயை விஞ்சின.
- ஜனவரி (2025) மாதத்தில் மட்டும், மாதாந்திர ஏற்றுமதியானது இதுவரையில் இல்லாத அளவிற்கு மிக அதிகமாக 250 பில்லியன் டாலராகப் பதிவாகியுள்ளது.
- இது 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தினை விட சுமார் 140 சதவீதம் அதிகரிப்பைக் குறிக்கிறது.
- தமிழ்நாடு ஃபாக்ஸ்கான் மையத்தின் சுமார் பாதிப் பங்குடன், ஆப்பிள் நிறுவனத்தின்

ஐபோன் விற்பனை நிறுவனங்கள், இந்த ஏற்றுமதிகளில் சுமார் 70 சதவீதப் பங்கினைக் கொண்டிருந்தன.

- ஃபாக்ஸ்கான் நிறுவனத்தின் ஏற்றுமதியானது முந்தைய நிதியாண்டுடன் ஒப்பிடும் போது 43 சதவீதம் அதிகரித்துள்ளது.
- தமிழ்நாட்டில் உள்ள மற்றொரு நிறுவனமான பெகாட்ரான் இதில் சுமார் 12 சதவீதப் பங்களிப்பினைக் கொண்டுள்ளது.
- மொத்த திறன் பேசி ஏற்றுமதியில் சாம்சங் நிறுவனம் சுமார் 20 சதவீத பங்களிப்பைக் கொண்டுள்ளது.

| Year | Value of smartphone exports |
|---|---|
| FY21 | $ 3.1 billion |
| FY22 | $ 5.8 billion |
| FY23 | $ 11.1 billion |
| FY24 | $ 15.6 billion |


## 2030 ஆம் ஆண்டில் இந்தியா-கத்தார் இடையிலான வர்த்தகம்




- இந்தியா மற்றும் கத்தார் ஆகிய இரு நாடுகள், வர்த்தகம், முதலீடு மற்றும் எரிசக்தி ஆகியவற்றில் ஒத்துழைப்பை வலுப்படுத்தி, தங்கள் இருதரப்பு உறவுகளை ஓர் உத்தி சார் கூட்டாண்மையாக மேம்படுத்த முடிவு செய்துள்ளன.
- இரு நாடுகளும் அடுத்த ஐந்து ஆண்டுகளில் தற்போது 14.08 பில்லியன் டாலர் மதிப்பு கொண்ட தங்களது இருதரப்பு வர்த்தகத்தினை சுமார் 28 பில்லியன் டாலர்கள் மதிப்புக் கொண்டதாக இரட்டிப்பாக்க இலக்கு நிர்ணயித்துள்ளன.

- கத்தார் நாட்டு முதலீட்டு ஆணையம் (QIA) ஆனது, ஏற்கனவே இந்தியாவில் சுமார் 1.5 பில்லியன் டாலரை முதலீடு செய்துள்ளது.

### MSME நிறுவனங்களுக்கான MCGS




- மத்திய அரசு ஆனது 'MSME நிறுவனங்களுக்கான பரஸ்பர கடன் உத்தரவாதத் திட்டம்' என்ற திட்டத்தினை' அறிமுகப்படுத்தியுள்ளது.
- குறு, சிறு மற்றும் நடுத்தர தொழில்துறை நிறுவனங்களை மேம்படுத்துவதற்காக 2025 - 26 ஆம் ஆண்டு மத்திய நிதிநிலை அறிக்கையில் இத்திட்டம் அறிவிக்கப்பட்டது.
- இத்திட்டம் ஆனது ஆலை, இயந்திரங்கள் அல்லது உபகரணங்களை வாங்குவதற்கு 100 கோடி ரூபாய் வரையில் கடன்களை வழங்குவதன் மூலம் MSME நிறுவனங்களுக்குப் பிணையமில்லாத கடன்களை பெற வாய்ப்பளிக்கிறது.
- இந்தத் திட்டம் ஆனது தேசியக் கடன் உத்தரவாத அறக்கட்டளை நிறுவனத்தின் (NCGTC) மூலம், 100 கோடி ரூபாய் வரையிலான கடன் பெறலுக்காக உறுப்பினர் கடன் வழங்கும் நிறுவனங்களுக்கு (MLIs) 60 சதவீத உத்தரவாதக் கடன் வழங்கீட்டினை வழங்குகிறது.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### உலகின் மிகப்பெரிய செங்குத்து உந்துவிசை கலவை இயந்திரம்

- இஸ்ரோ விண்வெளி நிறுவனமானது, உலகளவில் திட உந்துவிசைக்கான மிகப்பெரிய கட்டமைப்பான சுமார் 10 டன் எடையுள்ள 'செங்குத்து உந்து விசை எரிபொருள் கலப்பு இயந்திரத்தினை' வெற்றிகரமாக உருவாக்கியுள்ளது.
- இந்திய விண்வெளிப் போக்குவரத்து அமைப்புகளில் திட உந்துவிசை முக்கியப் பங்கு வகிக்கிறது.
- ஓர் உந்துவிசை எரிபொருள் கலவை எந்திரம் என்பது விண் ஏவு கல உந்துவிசைப் பொருட்களை, மிகவும் குறிப்பாக எரிபொருள் மற்றும் ஆக்சிஜனேற்றப் பொருட்களை ஒன்றாக கலக்கும் ஒரு இயந்திரமாகும்.

- இது ஏவு கலத்தின் திட விசைப் பொறிகளுக்கு என்று சீரான மற்றும் நம்பகமான உந்து விசைக் கலவையை வழங்குவதை உறுதி செய்யும்.




**Grok 3 AI**




- எலான் மஸ்க்கின் xAI நிறுவனமானது, ஒரு புதிய Grok 3 செயற்கை நுண்ணறிவு மாதிரி தொடர்களை வெளியிட்டுள்ளது.
- Grok-3 ஆனது அதன் முந்தைய மாதிரிகளை விட 10 மடங்கு கணினிச் செயல்பாட்டு திறனைக் கொண்டுள்ளது.
- Grok 3 ஆனது, xAI நிறுவனத்தின் Colossus மீத்திறன் கணினியால் இயக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- இது பூமியில் உள்ள திறன் மிக்க செயற்கை நுண்ணறிவாகக் கூறப்படுகிறது.


# சுற்றுச்சூழல் செய்திகள்

## பரம்பிக்குளம் புலிகள் வளங்காப்பகத்தில் விலங்கினக் கணக்கெடுப்பு

- பாலக்காட்டில் உள்ள பரம்பிக்குளம் புலிகள் வளங்காப்பகத்தில் வனத்துறை நடத்திய விலங்கின கணக்கெடுப்பு ஆனது, அப்பாதுகாக்கப்பட்டப் பகுதியின் விலங்கினச் சரி பார்ப்புப் பட்டியலில் 15 புதிய இனங்களைச் சேர்த்துள்ளது.
- இந்தக் கணக்கெடுப்பில் மொத்தம் 206 பறவை இனங்கள் பதிவு செய்யப்பட்டுள்ளன.
- இந்தப் புதிய சேர்க்கைகளுடன் சேர்த்து, இந்த வளங்காப்பகத்தில் உள்ள மொத்தப் பறவை இனங்களின் எண்ணிக்கை 302 ஆக அதிகரித்துள்ளது.
- இதில் ஐந்து புதிய வண்ணத்துப்பூச்சி இனங்களும் வளங்காப்பகத்தின் சரி பார்ப்புப்

பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன.

- இந்த இனங்களின் சேர்க்கையின் மூலம் இவ்வளங்காப்பகத்தில் உள்ள வண்ணத்துப் பூச்சிகளின் எண்ணிக்கை 273 ஆக உயர்ந்துள்ளது.
- மேலும், இந்தக் கணக்கெடுப்பில் மூன்று புதிய இனங்கள் உட்பட சுமார் 39 வகையான தட்டான் இனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.
- அவை இந்த வளங்காப்பகத்தின் சரி பார்ப்புப் பட்டியலில் தட்டான் இனங்களின் எண்ணிக்கையினை 69 ஆக அதிகரிக்கின்றன.




## கங்கை நீர் பற்றிய CBCP அறிக்கை

| Date | River | Location | pH (6.5 - 8.5) | Color (Hazen) | DO (≥ 5 mg/l) | Temp (°C) | Turbidity (NTU) | COD (mg/l) | BOD (≤ 3 mg/l) | Fecal Coliform (≤ 2500 MPN/100ml) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 04.02.2025 | Ganga | Shringverpur Ghat | 8.37 | 10 | 9.5 | 19.5 | 3 | 15.9 | 2.47 | <1.8 |
| | Ganga | Lord Curzon bridge | 8.42 | 10 | 9.3 | 19.5 | 39 | 16.5 | 2.52 | 200 |
| | Ganga | Before shashtri bridge near Nagvasuki Mandir Pantoon Pul No. 15 | 8.27 | 10 | 8.3 | 19.5 | 4.3 | 16.2 | 2.81 | 11000 |
| | Ganga | Sangam | 8.41 | 10 | 8 | 19.2 | 3 | 14.6 | 2.07 | 7900 |
| | Ganga | Deeha Ghat | 8.41 | 15 | 8.8 | 19.5 | 30 | 14.2 | 3.32 | 4900 |
| | Yamuna | Old Naini Bridge | 8.48 | 10 | 8.2 | 19.3 | 23 | 15.9 | 2.45 | 3300 |
| | Yamuna | Before confluence to river Ganga at Sangam | 8.32 | 15 | 8.1 | 19.3 | 13 | 12.1 | 2.51 | 4900 |

- தேசியப் பசுமை தீர்ப்பாயம் (NGT) ஆனது, பிரயாக்ராஜில் உள்ள கங்கை மற்றும் யமுனை ஆகிய நதிகளில் அதிக மலக்குடற் பற்றுயிரி பாக்டீரியாக்கள் இருப்பதாகக் குறிப்பிட்டுள்ளது.
- மத்திய மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் (CPCB) அறிக்கையானது, பிரயாக்ராஜ் நதி சங்கமிக்கும் இடத்திற்கு அருகில் உள்ள இரு நதிகளின் ஊடே பல்வேறு இடங்களில் அதிக அளவு மலக் குடற் பற்றுயிரி பாக்டீரியாக்கள் இருப்பதாகக் குறிப்பிடுகிறது.

- மனிதரின் அல்லது கால்நடைகளின் கழிவுகள் கலப்பதால் அந்த நதிகளின் நீரில் மலக் குடற் பற்றுயிரி கலப்பு ஏற்படுகிறது.
- இந்தப் பாக்டீரியாக்களின் அளவுகள் அடன்கு நீரின் தரத்தைக் குறிப்பதோடு, நோயை உண்டாக்கும் பாக்டீரியாக்கள் இருப்பதைக் கண்காணிக்க உதவுகிறது.
- கங்கையில் உள்ள மொத்த மலக்குடற் பற்றுயிரி பாக்டீரியாக்களின் அளவுகள் (மலம் மற்றும் பிற) எப்போதும் காணப்படும் அளவை விட 1,400 மடங்கு அதிகமாக இருப்பது கண்டறியப் பட்டுள்ளது.
- அவை யமுனை மற்றும் பிரயாக்ராஜ் நதியின் சில இடங்களில் 660 மடங்கு அதிகமாக இருந்தன.
- 2004 ஆம் ஆண்டு நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சகத்தினால் அமைக்கப்பட்ட குழுவானது, மலக் குடற் பற்றுயிரி ஆனது 500 MPN/100ml என்ற ஏற்கத் தக்க வரம்பில் இருக்க வேண்டும் என்று பரிந்துரைத்தது.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## உலகின் மிகப்பெரிய ராணுவச் செலவினம் கொண்ட நாடு 2025

| Rank 2025 | Country | Defence Budget 2025 (USD) |
|---|---|---|
| 1 | United States | $895,000,000,000 ($895 billion) |
| 2 | China | $266,850,000,000 ($266.85 billion) |
| 3 | Russia | $126,000,000,000 ($126 billion) |
| 4 | India | $75,000,000,000 ($75 billion) |
| 5 | Saudi Arabia | $74,760,000,000 ($74.76 billion) |
| 6 | United Kingdom | $71,500,540,000 ($71.5 billion) |
| 7 | Japan | $57,000,000,000 ($57 billion) |
| 8 | Australia | $55,700,000,000 ($55.7 billion) |
| 9 | France | $55,000,000,000 ($55 billion) |
| 10 | Ukraine | $53,700,000,000 ($53.7 billion) |


- 2024 ஆம் ஆண்டில் உலகளாவியப் பாதுகாப்பு செலவினங்கள் சுமார் 2.46 டிரில்லியன் டாலரை எட்டின.
- இது முந்தைய ஆண்டில் பதிவான 2.24 டிரில்லியன் டாலரிலிருந்து அதிகரிப்பினைக் குறிக்கிறது என்பதோடு இது உலகளாவிய மொத்த உள்நாட்டு உற்பத்தியில் உலக நாடுகளின் சராசரி பாதுகாப்புச் செலவினத்தினை 1.9% ஆக உயர்த்தியுள்ளது.
- இது 2022 ஆம் ஆண்டில் 1.6% ஆகவும், 2023 ஆம் ஆண்டில் 1.8% ஆகவும் அதிகரித்துள்ளது.
- 2025 ஆம் ஆண்டில் அமெரிக்கா உலகின் மிகப்பெரிய ராணுவச் செலவினம் கொண்ட நாடாக உள்ளது.
- இப்பட்டியலில் அமெரிக்கா தொடர்ந்து முன்னணி வகிப்பது மட்டுமல்லாமல், உலகின் முதல் ஐந்து ராணுவச் செலவினங்களில் 62.3 சதவீதப் பங்கினைக் கொண்டுள்ளது.
- சீனா மற்றும் ரஷ்யா ஆகியவை முறையே 18.6 சதவீதம் மற்றும் 8.8 சதவீதப் பங்குடன் அமெரிக்காவைத் தொடர்ந்து இடம் பெற்றுள்ளன.
- இந்த உலகளாவிய ஆயுதக் குறியீட்டில் நான்காவது இடத்தில் இடம் பெற்றுள்ளதுடன், இந்தியா உலகின் முன்னணி ராணுவ சக்திகளில் ஒன்றாக அங்கீகரிக்கப் பட்டு

உள்ளது.

- 2025 ஆம் நிதியாண்டிற்கான மத்திய நிதிநிலை அறிக்கையில், அரசாங்கம் ஆனது பாதுகாப்பு அமைச்சகத்திற்காக 6.81 லட்சம் கோடி ரூபாயை ஒதுக்கியுள்ளது.
- இது ஒட்டு மொத்த மத்திய நிதிநிலை அறிக்கையில் 13.45% ஆகும்.
- இது அரசாங்க அமைச்சகங்களுக்கு வழங்கப் பட்டவற்றுள் மிக அதிக ஒரு ஒதுக்கீடாக கருதப் படுகிறது.

# மாநிலச் செய்திகள்

## nPROUD முன்னெடுப்பு




- கேரள மாநிலம் nPROUD என்ற முன்னெடுப்பினை (பயன்படுத்தப்படாத மருந்துகளை அகற்றுவதற்கான புதிய திட்டம்) தொடங்க உள்ளது.
- இது காலாவதியான மற்றும் பயன்படுத்தப்படாத மருந்துகளைச் சேகரித்து அறிவியல் பூர்வமான முறைகள் மூலம் அப்புறப்படுத்துவதற்காக இந்தியாவில் மேற்கொள்ளப் பட உள்ள இது போன்ற முதல் வகையான முன்னெடுப்பாகும்.
- இந்தத் திட்டம் ஆனது முறையான அகற்றும் அமைப்புகள் இல்லாத ஒரு நிலையினைச் சமாளிப்பது, சுற்றுச்சூழல் மாசுபாடு, பல சுகாதார அபாயங்கள் மற்றும் நுண்ணுயிர் எதிர்ப்பைத் தடுப்பது ஆகியவற்றை நோக்கமாகக் கொண்டுள்ளது.

## கேரளாவின் சுகாதாரப் புரட்சி

- தற்போது சுமார் 2,095.63 மெட்ரிக் டன் திரவ ஆக்சிஜன் தற்போது கிடைக்கப் பெறும் என்ற ஒரு மொத்த சேமிப்புத் திறனுடன் ஆக்ஸிஜன் தன்னிறைவை நோக்கிய அதன் திட்டம் அம்மாநிலத்தின் குறிப்பிடத்தக்க சாதனைகளில் ஒன்றாகும்.
- அம்மாநில அரசாங்கமானது 709 குடும்ப நல மையங்களை நிறுவுவதன் மூலம், ஆரம்ப சுகாதாரத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.
- அந்த மாநிலத்தில் உள்ள மொத்தம் 885 ஆரம்ப சுகாதார நிலையங்களில், சுமார் 709

நிலையங்கள் மிக நன்கு மேம்படுத்தப் பட்டு, கேரளா முழுவதும் உள்ள சமூகங்களுக்கு அத்தியாவசிய சுகாதாரச் சேவைகளை விரிவுபடுத்துகிறது.

- கடந்த மூன்றரை ஆண்டுகளில் 2,517,000 பேர் இலவச சிகிச்சை மூலம் பயனடைந்து உள்ளனர்.
- தற்போது 93 நகர்ப்புறங்களில் அமைக்கப்பட்டுள்ள 380 நகர்ப்புறப் பொதுச் சுகாதார மையங்களுடன் மொத்தம் 5,415 சமூக சுகாதார மையங்கள் செயல்படுகின்றன.
- அங்குள்ள அனைத்து மாவட்டங்களிலும் பல இருதய ஆய்வுக் கருவிகளைக் கொண்ட ஆய்வகங்களைக் கொண்ட ஒரே மாநிலம் கேரளாவாகும் என்ற நிலையில் மேலும், அனைத்து மாவட்ட/பொது/தாலுகா தலைமை மருத்துவமனைகளிலும் கூழ்மப் பிரிப்பு அலகுகள் கொண்டிருக்கும் நிலையை அடைந்த முதல் மாநிலமாகவும் உள்ளது.
- அங்கு அனைத்து மாவட்ட அளவிலான மருத்துவமனைகளிலும் பக்கவாத சிகிச்சைப் பிரிவுகளைக் கொண்ட முதல் இந்திய மாநிலம் கேரளா ஆகும்.
- திருவனந்தபுரம் மருத்துவக் கல்லூரியானது, நரம்பு செல்களுடன் தொடர்புடைய பல நோய்களைக் கண்டறியும் ஒரு ஆய்வகத்துடன் கூடிய, பக்கவாத நோயாளிகளுக்கு கிடைக்கும் சிகிச்சை நலனை மேம்படுத்துகின்ற, மிக விரிவான பக்கவாத சிகிச்சைப் பிரிவை நிறுவிய முதல் இந்திய மாநிலம் என்றப் பெருமையினைப் பெற்றுள்ளது.
- கேரளாவில் 2011 ஆம் ஆண்டு முதல் 99 தனியார் மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளன.





## டெல்லியின் புதிய முதல்வர்

- முதல் முறையாக மாநிலச் சட்டமன்ற உறுப்பினரான ரேகா குப்தா டெல்லியின் புதிய முதல்வராக பதவியேற்றுள்ளார்.
- மொத்தம் 70 உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றத்தில் 48 இடங்களைப் பெற்று, 27


ஆண்டுகளுக்குப் பிறகு அவரின் கட்சியான பாஜக தேசிய தலைநகரில் கட்சி மீண்டும் ஆட்சிக்கு வருகிறது.

❖ அவர் 2007 ஆம் ஆண்டு வடக்கு பிதாம்பூராவிலிருந்து கவுன்சிலராக தேர்ந்தெடுக்கப் பட்டார்.




# பிரபலமானவர்கள், விருதுகள், மற்றும் நிகழ்வுகள்


## மூத்த அறிவியலாளர் R.M. வாசகம்




❖ ஒரு மூத்த விண்வெளி அறிவியலாளரும், தமிழ்நாடு அண்ணா பல்கலைக் கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான R. மாணிக்க வாசகம் காலமானார்.

- இஸ்ரோ அறிவியலாளர்களில், மிக இளம் வயதில் பத்மஸ்ரீ விருதைப் பெற்றவர் என்றப் பெருமைக்குறியவர் ஆவார்.
- இந்தியாவின் பாஸ்கரா செயற்கைக் கோளின் திட்ட இயக்குநராகப் பணியாற்றினார்.
- இவர் தமிழ்நாடு தகவல் தொழில்நுட்ப நிறுவனத்தின் (TANITEC) நிறுவனர் - இயக்குனர் ஆவார்.
- அவர் இந்திய விண்வெளி ஆராய்ச்சி மையத்தின் (ISRO) மூத்த மற்றும் புகழ்பெற்ற அறிவியலாளராகப் பணியாற்றினார்.

## நெல் கொள்முதலுக்கான சுய உதவிக் குழுக்கள்





- தமிழ்நாடு பொது விநியோகக் கழகம் (TNCSC) ஆனது, காவிரி கழிமுகப் பகுதிகளில் / டெல்டாவில், நேரடிக் கொள்முதல் மையங்களில் (DPC) மேற்கொள்ளப்படும் ஒரு நெல் கொள் முதலில் ஊழல் நடப்பதாக புகார்கள் எழுந்துள்ளதால் அது குறித்து நடவடிக்கை மேற்கொள்ள உள்ளது.
- இது ஒரு மூத்த இந்தியக் காவல் பணி அதிகாரியை அதன் புலனாய்வுப் பிரிவுக்குத் தலைமையாக நியமிப்பது என்ற ஆலோசனையையும் மேற்கொண்டு வருகிறது.
- இந்தப் பிரிவு தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளரின் தலைமையின் கீழ் உள்ளது.
- 2011-12 ஆம் ஆண்டு முதல் 2020-21 ஆம் ஆண்டு வரையிலான மற்றும் இந்த நடப்பு ஆண்டிற்கான தரவுகளின் படி, சுமார் 10 மாவட்டங்களைக் கொண்ட இப்பகுதியானது, இந்த மாநிலத்தில் இருந்து பெறப்படும் மொத்த நெல் கொள்முதலில் குறைந்தது 80% பங்கினைக் கொண்டுள்ளது.
- இந்தப் பகுதிக்குள், தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் மற்றும் மயிலாடுதுறை ஆகியவற்றை உள்ளடக்கிய ஒட்டு மொத்தத் தஞ்சாவூர் பிராந்திய மாவட்டங்களின் பங்கு சுமார் 85% ஆகும்.

❖ தமிழ்நாட்டில் இருந்து பெறப்பட்ட கொள்முதலில், இந்த நான்கு மாவட்டங்களின் பங்கு 67% முதல் 68% அல்லது மூன்றில் இரண்டு பங்கு என்ற அளவில் உள்ளது.

# இதரச் செய்திகள்

## கல்யாணச் சாளுக்கியர் சகாப்த கன்னட கல்வெட்டுகள்




❖ தெலங்கானாவின் விகாராபாத்தில் உள்ள புதூர் மண்டல் எனுமிடத்தில் உள்ள கண்கல் கிராமத்தில் முதன்முறையாக கல்யாணச் சாளுக்கியச் சகாப்தத்தின் மூன்று புதியக் கன்னட கல்வெட்டுகள் கண்டறியப்பட்டுள்ளன.

❖ கல்யாணச் சாளுக்கிய வம்சத்தின் பேரரசர் மூன்றாம் சோமேஸ்வரப் பூலோகமல்ல தேவரின் 4, 5 மற்றும் 6 ஆம் ஆட்சி ஆண்டுகளில் அவை வழங்கப் பட்டன.

❖ அவை முறையே கி.பி. 1129 ஆம் ஆண்டு டிசம்பர் 25, கி.பி. 1130 ஆம் ஆண்டு அக்டோபர் 05 மற்றும் கி.பி. 1132 ஆம் ஆண்டு ஜனவரி 08 ஆம் தேதிகளைச் சேர்ந்தவையாகும்.

## C40 சிட்டீஸ் மற்றும் UN-வாழ்விடங்கள்

❖ பசுமை மற்றும் தகவமைப்பு மிக்க ஒரு நகர்ப்புற மாற்றத்திற்கான ஆப்பிரிக்க மன்றம் ஆனது கென்யாவின் நைரோபி நகரில் நடைபெற்றது.

❖ C40 சிட்டீஸ் மற்றும் UN-வாழ்விடங்கள் ஆகியவை ஒரு நகர்ப்புறத் திட்டமிடலை மாற்றி அமைப்பதற்கான ஒரு முக்கியக் கூட்டாண்மையை அறிவித்துள்ளன.

- 2050 ஆம் ஆண்டிற்குள் உலக நகரங்கள் தனது உமிழ்வை சுமார் 25% குறைக்க உதவும் வகையில் இந்தக் கூட்டாண்மை ஆனது ஒரு புதிய நகர்ப்புறத் திட்டமிடல் ஊக்கத் திட்டத்தினை உருவாக்கும்.
- அவை மிகப் பாதுகாப்பான நியாயமான மற்றும் உள்ளார்ந்த நகர்ப்புறச் சூழல்களை உருவாக்கும்.




## Future Brand நிறுவனத்தின் நிறுவன மதிப்புக் குறியீடு 2024

- இந்தியாவின் மிகப்பெரிய மற்றும் மிகவும் மதிப்பு மிக்க நிறுவனமான ரிலையன்ஸ் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் ஆனது இப்பட்டியலில் இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
- இதில் ஆப்பிள், நைக், வால்ட் டிஸ்னி, நெட் ஃபிலிக்ஸ், மைக்ரோ சாப்ட், இன்டெல் மற்றும் டொயோட்டா போன்ற நன்கு அறியப்பட்ட உலகளாவிய நிறுவனங்களை விட ரிலையன்ஸ் நிறுவனம் முன்னணியில் உள்ளது.
- 2023 ஆம் ஆண்டில் இந்த நிறுவனம் 13 வது இடத்தில் இருந்தது.
- இந்தப் பட்டியலில் கொரிய நிறுவனமான சாம்சங் முன்னணியில் உள்ளது.

| FBI Global Ranking 2024 | 2024 vs 2023 | Company | FBI Global Ranking 2023 | PwC 2024 Position | Sector |
|---|---|---|---|---|---|
| 1 | ↑4 | SAMSUNG | 5 | 21 | Information Technology |
| 2 | ↑11 | Reliance | 13 | 46 | Energy |
| 3 | ↓2 | | 1 | 2 | Information Technology |
| 4 | ↑8 | | 12 | 98 | Consumer Discretionary |
| 5 | ↑4 | ASML | 9 | 25 | Information Technology |
| 6 | ↑8 | danaher | 14 | 67 | Healthcare |
| 7 | ↑19 | The Walt Disney Company | 26 | 49 | Communication Services |
| 8 | ↑13 | | 21 (2022) | 33 | Consumer Staples |
| 9 | ↓5 | tsmc | 4 | 10 | Information Technology |
| 10 | - | IHC | NEW ENTRY | 45 | Industrials |
| 11 | - | INTUITIVE | NEW ENTRY | 100 | Healthcare |
| 12 | ↑7 | NETFLIX | 19 | 40 | Communication Services |
| 13 | - | APPLIED MATERIALS | NEW ENTRY | 74 | Information Technology |
| 14 | ↓8 | Microsoft | 6 | 1 | Information Technology |
| 15 | - | | NEW ENTRY | 84 | Consumer Discretionary |
| 16 | ↑41 | 中国建设银行 | 57 | 85 | Financials |
| 17 | ↑5 | intel | 22 | 66 | Information Technology |
| 18 | ↑2 | Nestlé | 20 | 37 | Consumer Staples |
| 19 | ↓4 | TOYOTA | 15 | 28 | Consumer Discretionary |
| 20 | ↑34 | 中国农业银行 | 54 | 60 | Financials |

## ஃபோர்ப்ஸ் இதழின் 30 வயதிற்குட்பட்ட 30 முன்னணி சாதனையாளர்கள் பட்டியல் 2025

- இது புதிய செயற்கை நுண்ணறிவுப் பிரிவு உட்பட 19 பல்வேறு பிரிவுகளில் சாதனைப்

படைத்த 30 வயதிற்குட்பட்ட 42 இளம் சாதனையாளர்களைப் பட்டியலிடுகிறது.

- இந்த ஆண்டு 11 பெண்கள் இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.
- தேசிய விருது பெற்ற நடிகையான அபர்ணா பாலமுரளி இந்தியத் திரைத் துறைக்கு ஆற்றியப் பங்களிப்புகளுக்காக இப்பட்டியலில் இடம் பெற்றுள்ளார்.
- தேவன் சந்திரசேகரன் (18), இப்பட்டியலில் இடம் பெற்ற இளம் நபராவார்.
- 2024 ஆம் ஆண்டு மாற்றுத் திறனாளிகளுக்கான பாரிசு நகர ஒலிம்பிக் போட்டியில், 2 வெண்கலம் வென்ற மாற்றுத் திறனாளி தடகள வீராங்கனையான ப்ரீத்தி பால் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★